# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2006/37 - 2017 පෙබරවාරි මස 15 වැනි බදාදා - 2017.02.15

*2006/37 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*"2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒழுங்குவிதிகள்" எனும் விடயத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 217 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 212 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

இத்தகைய ஒழுங்குவிதிகள் 2017, பெப்ரவரி, 09 இலிருந்து தொழிற்பாட்டுக்கு வருவதுடன், 2007, மாச்சு 05 ஆந் திகதிய 1487/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 2011, யூன் 30 ஆந் திகதிய 1712/18 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தங்கள் என்பன அதே திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றன.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
2017, பெப்புருவரி 9.

ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள் 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் அங்கீகாரத்திற்கான ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆணையாளர் நாயகம் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட எல்லா அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளினைப் பற்றிய இடாப்பொன்றினைப் பேணி வருதல் வேண்டும்.

3. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ், தம்மை, அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியாள் ஒருவர் அத்தகைய நோக்கத்திற்கென ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் படிவத்தில் ஆணையாளர் நாயகத்திற்கு அதற்கென விண்ணப்பித்தல் வேண்டும்.




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. ஆள் எவரும் -

இருபத்தொரு வயதை அடைந்தவராகவும் இலங்கைப் பிரசையாகவும் இலங்கையில் வதிபவராகவும் அத்துடன்,

(அ) இரண்டாவது திணைக்களப் பரீட்சையில் சித்திபெற்ற உள்நாட்டு இறைவரித் திணைக்கள வரி மதிப்பீட்டாளராக இரண்டாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின், அந்தத் தரத்தில் ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவையுடையவராகவும் ; அல்லது

(ஆ) கம்பனி (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு கணக்காய்வாளராகப் பதிவு செய்யப்பட்ட தனியாளாக; அல்லது

(இ) இலங்கைக் கணக்காளர் சேவையில் ஒரே உறுப்பினராக II ஆம் வகுப்பு கணக்காய்வாளர் தரத்திற்குக் குறையாத அச்சேவைக்கென போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றின் நியமனம் பெற்றவராகவும் ; அல்லது

(ஈ) இலங்கை அரசாங்கக் கணக்காளர் சேவையில் உறுப்பினராக அச்சேவையில் II ஆம் வகுப்புக்குக் குறையாத போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றில் அச்சேவைக்கு நியமனம் பெற்றவராகவும் ; அல்லது

" (i) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு தகைமையினைப் பெற்றவராகவும், அதாவது -

(அ) பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் நிறைவேற்றுத்தர நிலை 1 பரீட்சை/கணக்கீடு மற்றும் வியாபார நிலை 1 இல் சான்றிதழ்/ சான்றுப்படுத்திய வியாபார கணக்காளர்/ சான்றுப்படுத்திய வரி ஆலோசகராகவும் ;

(ஆ) ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் உயர்தொழில் பகுதி 1 இல் ஆகு செலவு முகாமைப் பட்டய நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும் ; அல்லது

(இ) சான்றுபெற்ற கணக்காளரின் பட்டம் பெற்ற சங்கத்தின் உயர்தொழில் பரீட்சைப் பிரிவு 1 இல் சித்தி பெற்றவராகவும் ; அல்லது

(ஈ) இலங்கை சான்றுபெற்ற முகாமைக் கணக்காளர்களின் நிறுவகத்தின் இலங்கை சான்றுப்படுத்திய முகாமைக் கணக்காளர்களின் முகாமைத்துவ நிலை (நிலை 03)/இடை நிலைப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும் ;

(உ) கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவராகவும் ;
அத்துடன்

(ii) கணக்கீட்டில் குறைந்தது 10 வருட பின் நிலைப் படிப்புத்தகைமை அனுபவம் கொண்டவராகவும், (சுய தொழில் முயற்சியில் ஈடுபடாதவராக இருத்தல்) இருந்தாலொழிய, அதிகாரம் பெற்ற பிரதிநிதியாகப் பதிவு செய்து கொள்வதற்கோ, தமது பெயரை இடாப்பில் வைத்திருப்பதற்கோ உரித்துடையவராதலாகாது.".

5. ஆள் எவரும் -

(அ) தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் சித்தசுவாதீனமற்றவரென தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால், அல்லது

(ஆ) கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கி முறிந்தவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்து அத்தகைய கடனிறுக்க முடியாத நிலை அல்லது முறிவு முற்றிலும் அல்லது பகுதியளவில் தடுக்கவியலாத இழப்புக்களினால் அல்லது துரதிஸ்டவசத்தால் ஏற்பட்டதெனக் கூறும் சான்றிதழொன்று தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் வழங்கப்பெறாதவராகவும் இருந்தால்,

(இ) தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் இலங்கையிலோ அல்லது வேறிடத்திலோ ஒழுக்கக்கேட்டினை உட்படுத்தும் தவறொன்றினைப் புரிந்தவரென குற்றஞ்சாட்டப்பட்டவராக இருப்பின்,

(ஈ) உயர்தொழிலுக்குரிய பிறழ் நடத்தைத் தவறிழைத்தவராக காணப்படின், அல்லது

(உ) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக வியாபாரத்தினைக் கொண்டு நடாத்தி வருபவரும் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் தவிர்ந்த, எவரேனும் தொழில் வழங்குநரின் (கணக்காய்வு நிறுவனம் தவிர்ந்த) கீழ் ஏதேனும் முறையில் தொழிலினை ஏற்றவராக காணப்படின், அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக பதிவு செய்து கொள்வதற்கோ தமது பெயரை இடாப்பில் வைத்திருப்பதற்கோ உரித்துடையவராதலாகாது.

6. ஆணையாளர் நாயகம் பதிவுக்கு விண்ணப்பிக்கும் தனியாள் ஒருவர் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு உரித்துடையவரெனத் திருப்திப்படுமிடத்து, கணக்காய்வாளர் நாயகத்தினால் பேணப்பட்டு வரும் இடாப்பிலிருந்து நீக்கப்பெறுகின்ற ஆளின் பெயர் மீளப் பெறப்பட வேண்டிய அத்தகைய தனியாளைப் பதிவு செய்து அத்தகைய ஆளுக்கு அவரது பதிவை அத்தாட்சிப்படுத்தும் கடிதத்தினையும் வழங்குதல் வேண்டும்.

7. எவரேனும் தனியாளரின் பெயர் ஆணையாளர் நாயகத்தினால் பேணி வரப்படும் இடாப்பிலிருந்து நீக்கப்பெற்றதன் மேல் மீளப் பெறப்படுதல் வேண்டும்.

(அ) அத்தகைய தனியாள் - பெயர் அகற்றலுக்காக எழுத்து மூலம் விண்ணப்பித்திருப்பின் ,

(ஆ) அத்தகைய தனியாள் - ஒழுங்குவிதி 5 இல் குறிப்பிடப்பட்ட தகுதியீனங்களுக்கு உள்ளாகியிருப்பின் ,

(இ) அத்தகைய தனியாளினால் அவரது உயர் தொழில் தன்மையில் புரியப்பட்ட ஏதேனும் செயல், கவனயீனம், நேர்மையின்மை அல்லது தவறான நடத்தை காரணமாக அத்தகைய தனியாளின் பெயர் இடாப்பிலிருந்து நீக்கப்படல் வேண்டுமென ஆணையாளர் நாயகம் கருதினால் , அகற்றி விடுதல் வேண்டும்.

8. ஆணையாளர் நாயகம், இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் பெயர் நிரலொன்றை வருடத்தில் ஒரு முறையேனும் அவ்வருட மாச்சு மாதம் முப்பத்தோராம் நாளுக்குப் பிந்தாது வர்த்தமானியில் பிரசுரிக்கச் செய்யலாம்.

3- 125

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.